அமெரிக்கப் பாதிரியாரின் அபேதவாத அறிவொளி!

Phone No. 4502
[விலை அணா ஒன்று]

Regd. No. M. 5458
[இலங்கை ... சதம்]

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAIMANI

(திராவிடர் தமிழ் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (6—1—50) வெளியீடு (7—1—50) [இதழ் 136

ஒட்டிய வயிற்றிலிருந்தே கம்யூனிஸம் முளைக்கிறது!

:0:

மார்க்ஸைக் கடிந்து, மாஸ்கோவைத் தூற்றுவதால் பயனில்லை

(o)

வாழ்க்கைத்தரம் உயர்ந்தாலன்றி, வளரும் கம்யூனிஸம் தளராது!

(o)

மத நிலையங்களின் பொறுப்பின்மைக்கும் சவுக்கு!

கம்யூனிஸம் மாஸ்கோவிலிருந்தோ, மார்க்ஸின் நூறாண்டுக்கு முந்திய புத்தகத்திலிருந்தோ முளைத்து வருவதல்ல. ஒட்டிய வயிற்றிலிருந்து முளைப்பதேயாகும். கம்யூனிஸம். ஒரு மனிதனுக்குப் போதுமான அளவுக்கு உணவு உணவில்லையானால், உடுக்க உடையில்லையானால், இருக்க இடமில்லையானால் அவனது குழந்தைக்குப் படிக்க பள்ளியில்லையானால், அவனிடம் மகிழ்ச்சி எப்படியிருக்க முடியும்? அதிருப்தியே அவனிடம் வளர்கிறது. தனது நிலையை ஓரளவுக்கு அபிவிருத்தி செய்யக் கூடிய மாறுதலொன்றை அவன் விழைந்து நிற்கிறான். தனது வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வாக்களிக்கும் எந்த நபரையும் பின்பற்றத் தயாராயிருக்கிறான். கம்யூனிஸம் வாக்களிப்பது இதைத்தான் மாறுதலொன்றின் காரணமாக, தனது நிலைமையில் அபிவிருத்தி யேற்படுமென்று, சரியாகவோ தவறாகவோ ஒரு மனிதன் நம்புவானேயாகில், அத்தகைய மாறுதலுக்கு வழி செய்வதாக வாக்களிக்கும் மனிதர்களை அவன் பின்பற்றித்தான் தீருவான்.

கம்யூனிஸம் பரவுவதைத் தடுக்க ஒரே ஒரு வழிதானிருக்கிறது; அதாவது நாம் ஓரளவுக்கு சமதர்மக் கோட்பாட்டை அனுசரித்து நடக்கவேண்டும். நல்வாழ்வு வாழ ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமையுண்டென்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். சமூக நீதிக் கோரிக்கைகளை நாம் அங்கீகரிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, இந்தியாவில் லட்சாதி லட்சம் மக்கள் வலக்கவலை, வறுமைத் துன்பங்களில் ஆழ்ந்து கிடக்கின்றனர். அமெரிக்க பெருநகரங்களிற்கூட இந்நோய் விட்டிருக்கவில்லையே!

சென்னை—மயிலாப்பூர் ரனடே மண்டபத்தில் ஜனவரி 4-ந் தேதியன்று தென்னிந்திய தேசிய சங்கத்தின் சார்பில் நடைபெற்றக் கூட்டத்தில் ரெவரண்டு ஜார்ஜ் எல். பெய்ன், மேற்கண்டவாறு குறிப்பிட்டார். ரெவரண்டு பெய்ன், உலக சமாதானப் பிரியர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள வந்திருக்கும் அமெரிக்கப் பிரதிநிதியாவார். மேற்படி ரனடே ஹாலில் கூட்டத்திற்குத் தோழர் டி. டி. கிருஷ்ணமச்சாரி தலைமை தாங்கினார்.

ரெவரண்டு பெய்ன் மேலும் குறிப்பிட்டதாவது: "இன்றைய உலகை இன்றியமையாப் பிரச்னைகளுள் ஒன்றாகத் திகழ்கிறது கம்யூனிஸம். துரதிஷ்டவசமாக, கம்யூனிஸ்டு நாடுகளுக்கு வெளியே வதியும் ஒரு சில மக்களே உள்ளவற்றை அறிந்திருக்கின்றனர். கம்யூனிஸம் பற்றிய உண்மைகளையும், அதன் வளர்ச்சிக்கான காரணங்களையும், அதனை வரிசைப்படுத்தும் வழி முறைகளையும், மற்றும் அதனுடைய தன்மைகளையும்.

சோவியத் ரஷ்யா பெரும் பெருந் தொல்லைகளை யெல்லாம் திறம்பட சமாளித்து நிற்கிறது. இரண்டாவது உலக சம்பேரில், யு. எஸ் எஸ் ஆர் அமெரிக்காவைப் போல 50 மடங்கு அதிக வீரர்களை இழந்திருக்கிறது. ரஷிய மக்கள் கட்டாயத்துக்காகவே போரிட்டனரென்று கூறுவது தவறாகும். ஸ்டாலின் கிராடுக்கு நான் சென்றிருந்தபோது, அங்கு கோரம் உற்பத்து அழிவுகளை நேரிலேயே கண்டேன். மாஸ்கோவில் ஸ்டாலின் உட்கார்ந்து கொண்டு உத்தரவிட்டிருந்தால், மக்கள் அவ்வண்ணம் போரிட்டிருக்க மாட்டார்கள்.

போரால் நாசமுற்றப் பகுதிகளைச் சீரமைக்கும் வேலை ரஷ்யாவிலும், இதர கம்யூனிஸ்ட் நாடுகளிலும் அதி தீவிரமாய் விரைந்து நடைபெற்று வருகிறது.

மிக மிகத் தீவிரமான விவசாய சீர்திருத்தங்களெல்லாம் அங்கு நடைபெற்று வருகின்றன. நிலச்சுவான்தாரர்களிடமிருந்து அவர்களது சொத்தைப் பறிப்பது, கொடுமையல்லவா என்று முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த சிலர் கூறுகின்றனர். ஒரு மனிதனிடம் லட்சம் ஏக்கர் நிலம் குவிந்து இருக்க அனுமதிப்பது நியாயமா, அன்றி, அதனைக் கொண்டு இருபதாயிரம் விவசாயிகளுக்குப் பிரித்து விநியோகிப்பது நியாயமா? கம்யூனிஸ்டு பதில் இதுவேயாகும்;

[தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க]

சினிமாப் படங்களைப் பிற மொழிகளில் 'டப்' செய்யும் தொழில்

இந்தியாவில் 3 இடங்களில் நிலையம் நிறுவப்படுமாம்!

பிரிட்டிஷ் கர்னலின் மாபெரும் திட்டம்

லண்டன், ஜன. 5—

இந்திய பிலிம் தொழிலையே புரட்சிகரமாக மாற்றும் ஒரு மாபெரும் திட்டத்தை பிரிட்டிஷ் கர்னல் டிலேனி என்பவர் வகுத்திருக்கிறார். இதன்படி சினிமாப் படங்கள் பல்வேறு மொழிகளில் 'டப்' செய்யும் ஸ்தாபனங்கள் சென்னை, பம்பாய், கல்கத்தாவில் ஆரம்பிக்கப்படுமாம்.

படங்கள் தயாரிக்கப்படும்போதே பிற மொழிகளில் 'டப் செய்யும் ஒரு நூதன வழி இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம்.

இத்திட்டம் உருவானால் இம்மூன்று நகரங்களிலும் ஏற்படுத்தப்படும் ஸ்தாபனங்கள், ஒரு ஆசிய மத்திய ஸ்தாபனத்திற்கு உட்பட்டு வேலை செய்யும் என்று தெரிகிறது. இந்த ஆசிய மத்திய ஸ்தாபனம் அநேகமாக இந்தியாவிலோ இலங்கையிலோ ஏற்படுத்தப்படலாம்.

இந்தக் கம்பெனியின் இந்திய பிரதிநிதியாக இந்தியசினிமாத் தொழிலில் சிலகாலம் சம்பந்தப்பட்டிருந்தவரான வில்லியம் ஜே. மொய்ன் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் 'குளோப்' நிருபரிடம் கூறுகையில், இங்கிலீஷ், அமெரிக்கப் படங்களை 'டப்' செய்து இந்திய மார்க்கெட்டில் திணிப்பது தங்கள் நோக்கம் அல்ல வென்றும், இந்தியப் படங்களையே இதர மொழிகளில் 'டப்' செய்ய உத்தேசித்திருப்பதாகவும் கூறினார்.

முதல் ஆண்டில் 7 படங்களைத் தமிழிலும், 12 படங்களை இதர மொழிகளிலும் 'டப்' செய்து தென் கிழக்கு ஆசியாவிலும், கீழ்க்கோடியிலும் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்படவிருக்கிறது. இதைத் தவிர 6 இந்திய மொழியில்லாத வேறு மொழிகளில் இரண்டேகால் கோடி பிலிம் 'டப்' செய்யப்படவிருக்கிறது.

இப்பொழுது எந்த மொழியை வேண்டுமானாலும் எவ்வித குற்றம் குறை கூறமுடியாதபடி 'டப்' செய்ய தக்க சாதனம் கண்டுபிடிக்கப்பட்டதின் பேரிலேயே, இவ்வளவு தூரத் திற்குத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை இந்தியர் பிரஜா உரிமை

கொழும்பு, ஜன. 5—

இலங்கை இந்தியா பிரஜா உரிமை விஷயமாக இலங்கை சர்க்காருடன் பண்டித நேரு மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கும்படி கேட்டுக் கொள்வதென்று, இலங்கை இந்திய காங்கிரஸ் முடிவு செய்திருக்கிறது.

இவ் விஷயம் தீர்ந்துபோன விஷயம் என்று இலங்கை சர்க்கார் கருதுவது போல் இலங்கை இந்திய காங்கிரஸ் கருதவகிற தில்லை என்று கூறப்படுகிறது.

கிரீஸுக்கு மவுண்ட்பேட்டன் வருகை

ஏதென்ஸ், ஜன. 5—

லார்ட் அட்மிரல் மவுண்ட்பேட்டன் தன் கொடிக் கப்பல் லிவர்பூரில் பாலெரான் விரிகுடாவிற்கு வந்து சேர்ந்திருக்கிறார். அவர் கிரேக்க மன்னருடன் விருந்துண்டார்.

அணுக்குண்டும் சோவியத் யூனியனும்

:(0):

அமைதி-சமாதானமே ரஷ்யாவின் ஆசை

கடந்த போர்க்காலத்திலேயே ரஷ்யாவால் அணுக்குண்டைத் தயாரித்திருக்க முடியுமென்றும், அப்படித் தயாரித்ததை ஜெர்மனிமீது வீசியிருக்க முடியுமென்றும் கம்யூனிஸ்டு துண்டறிக்கையொன்று ஜனவரி 3ந் தேதியன்று பிராங்பர்ட்டில் விடுக்கப்பட்டது.

மேற்கு ஜெர்மனி கம்யூனிஸ்டு கட்சியின் அவ்வறிக்கை கூறுவதாவது:- ரஷ்யாமீது நாஜிகள் படையெடுப்புக்கு முன்னதாகவே, அணுக்குண்டு தயாரிக்கும் முறைகளை ரஷ்யர் தெரிந்திருந்தனரென்பதில் ஐயமில்லை. போர் நடந்த அந்த நான்காண்டு காலத்திலும் அதை அவர்களால் பிரயோகித்திருக்க முடியும். ஆயினும், அமைதி—சமாதானமே அனைத்திலும் சிறந்தது. அவசியமானதென சோவியத் யூனியன் கருதுகிறது. அதனால்தான் அன்றும் அணுக்குண்டை வீசவில்லை; இன்றும் அணுசக்தி ஆயுதங்களின் மீது தடைவிதிக்க வேண்டுமெனப் போராடி வருகிறது.

ஏகாதிபத்திய வல்லரசொன்றே ஜப்பான மீது முதன்முதலாக அணுக்குண்டுகளை வீசியது.

ஐக்கிய மாகாணத்துக்கு உணவு 'போனஸ்'

(0)

இந்தியசர்க்கார் ரூ. 50 லட்சம் வழங்குவர்

கடந்த பருவத்தில் மூன்றரை லட்சம் டன் உணவு தானியத்தை-கொள்முதல் வகையில் கொடுத்தமைக்காக ஐக்கிய மாகாண சர்க்கார் இந்திய சர்க்காரிடமிருந்து ரூ 50 லட்சம் 'போனஸ்' பெறப் போகிறதாம். மேற்படி மாகாண சர்க்கார் இத்தொகையை உணவு உற்பத்தித் திட்டங்கட்குச் செலவிடுமெனத் தெரிகிறது.

இஸ்ரேலில் கட்டாய ராணுவ சேவைத் திட்டம்

ஜெருசலம், ஜன. 5—

19 வயதுள்ள இஸ்ரேல் ஆண்களும் பெண்களும் கட்டாயமாக ராணுவத்தில் சேரவேண்டும் என்று இஸ்ரேல் சர்க்கார் உத்திரவு பிறப்பித்திருக்கின்றனர். 1930-ல் பிறந்த எல்லோரும் கட்டாய ராணுவ சேவை செய்யவேண்டும் என்று பிரதமர் பென்குரியான் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

மொராக்கோவுக்கு அமெரிக்க இறக்குமதிகள்

பாரீஸ், ஜன. 5—

சென்ற ஒரு ஆண்டுகாலமாக பிரான்சுக்கும் புதிய ஜெட் ... கூட்டேட்சுக்குமிடையே நடைபெற்ற பேச்சுக்குப்பின், இப்பொழுது ஏற்பட்டுள்ள உடன்படிக்கைப்படி மொராக்கோவுக்கு அமெரிக்க சாமான்கள் இறக்குமதி செய்யப்படுமென்று தெரிகிறது.

மாலை மணி

சென்னை 6—1—50 வெள்ளிக்கிழமை

அமைதி நிலவ வழி

"உலகத்தில் ஏகாதிபத்தியம்-நிற வேற்றுமை-பசி-பிணி இவை நீடிக்கும் வரை அமைதியும் சமாதானமும் காண முடியாது" என்ற அரிய கருத்தை உலக அமைதி விரும்புவோர் மாநாட்டிற்கு வந்திருந்த, வோவர்ட் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த, அமெரிக்க நீக்ரோ தலைவர் டாக்டர் எம். ஜான்சன், புது டில்லியில் நடைபெற்ற ஒரு வரவேற்புக் கூட்டத்தில் பேசும்போது வெளியிட்டுள்ளார்.

தீநாற்றம் வீசும் சாக்கடையை வைத்துக்கொண்டு கொசுக்கள் அதிலிருந்து கிளம்பக் கூடாது என்றால், கிளம்பாமல் இருக்குமா! ஓட்டைக் கூரையை வைத்துக்கொண்டு மழைத்துளிகள் உள்ளே ஒழுகக் கூடாது என்றால், வராமலிருக்குமா! அதுபோல, போர் மூளுவதற்கான அடிப்படை சாதனங்களை வைத்துக் கொண்டு, போர் மூளக் கூடாது, அமைதியேதான் நிலவவேண்டுமென்றால், அமைதி நிலவுமா! நிலவத்தான் முடியுமா! அந்தக் கருத்தை உள்ளடக்கிக் கொண்டுதான், டாக்டர் ஜான்சன் போர்-குழப்பம்-கிளர்ச்சி-சச்சரவு போன்ற அமைதியின்மைகள் நிலவுவதற்கு, ஏகாதிபத்தியம், நிறவேற்றுமை, பசி, பிணி ஆகியவைகள் காரணமாகும் என்னும் கருத்துப்பட கூறியுள்ளார்.

ஏகாதிபத்யம், அரசியலிலே ஆதிக்க வெறியை ஊட்டி, பிற நாடுகளையும் அடிமைப்படுத்தவும், அவைகளின் மீது ஆதிக்கம் செலுத்தவும் போரினைத் தூண்டிவிடும் தூண்டுகோலாக அமைகிறது. நிறவேற்றுமை வெறி, ஜாதி-மத வெறி போன்றவைகள், சமுதாய வாழ்வில் மக்களின் ஒரு பிரிவினரை அடிமையாக்கி வைத்துக்கொள்ள போரினை மூளச் செய்கின்றன. பசியும், பிணியும், வறுமையும் பொருளாதாரத் துறையில், தம்முடைய கொடுமைகளைப் போக்கிக்கொள்ள, வசதியுடையோரிடமிருந்து பெற்றுக் கொள்ள, குறிப்பாகப் பிறரிடமிருந்து பிடுங்கிக்கொள்ள, நாட்டிற்கு நாடு, இடத்திற்கு இடம், கூட்டத்திற்குக் கூட்டம் போர்தொடுக்கின்றன. ஆகவேதான், அமைதி கெட்டு, ஒழுங்கு கெட்டு, மக்களின் வாழ்வு கெட்டுப்போகக் காரணமாக இருக்கும் போர் முதலிய வேண்டாத கொடுமை நிகழ்ச்சிகள் நிகழாமலிருக்க அரசியல், பொருளாதார, சமுதாயத் துறைகளிலிருக்கும் ஆதிக்க வெறிப் பண்புகளும், அடிமையாகும் நிலைமைகளும் அறவே அகலவேண்டும் என்று டாக்டர் ஜான்சன் பகர்கிறார். அவர் ஒரு நீக்ரோ தலைவராகவும், பல்கலைக் கழகப் பேராசிரியராகவும் இருக்கும் காரணத்தால்தான், இந்த அமைதி கெடுக்கும் கொடுமைச் சாதனங்களின் தன்மையை நன்கு அறிந்திருக்கிறார். அவை நீங்க வேண்டும் என்பதிலே ஆவல் கொள்கிறார்.

"இந்தியாவிலிருந்து பிரிட்டிஷார் வெளியேறிவிட்டனர் என்றாலும், பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் மடியவில்லை; அது தென் ஆப்பிரிக்காவிலுள்ள கெனியா பிரதேசத்தில் உயிருடன் இருக்கிறது, ஐக்கிய இந்தோனேஷியாக் குடியரசை அமைத்த டச்சுக்காரர்களும் தென் ஆப்பிரிக்கா நீக்ரோக்களைச் சுரண்டினர்; பெல்ஜியர்களும் சுரண்டினர்; சுரண்டுகிறார்கள். எல்லா நாடுகளின் நட்புறவை அமெரிக்காவிரும்புகிறது; ஆனால் நீக்ரோக்களை அது ஒதுக்கி வைக்கிறது" என்ற விளக்கத்தைக் காட்டி, அமைதியைக் கெடுத்துவரும் ஆதிக்க வெறிகள் இன்னமும் எந்தெந்த வடிவில் எங்கெங்கு, யார் யாரால் கையாளப்படுகின்றன என்பதை உணர்த்தியுள்ளார். இன்றைய உலக முற்போக்குச் சக்திகளெல்லாம், ஆதிக்க வெறி மனப்பான்மை எங்கிருந்தாலும் அவற்றை அழித்தொழிக்க முற்படுமேயானால், அமைதி உலகெங்கும் நின்று நிலவ வழியேற்படும் என்பது உறுதி.

இந்தியத் துணைக்கண்டத்தில், அமெரிக்கா, தென் ஆப்பிரிக்காவில் தாண்டவமாடும் நிறவெறித் திமிர் தாண்டவமாடாவிட்டாலும், அதனோடு ஒப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவுக்குள்ள ஜாதி மதத் திமிர்கள் தலைவிரித்தாடுகின்றன. தீண்டாமைக் கொடுமை சட்டத்தினால் அகற்றப்பட்டு விட்டாலும், மக்களின் பழக்க வழக்கத்திலிருந்து அகற்றப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்டி, அந்த நிலை அடியோடு மாறவேண்டும் என்பதையும் வற்புறுத்தியுள்ளார் நீக்ரோ தலைவர். "அரசியலில் தீண்டாமையை ஒழித்துள்ள இந்திய மக்கள் அதைத் தங்கள் மனதிலிருந்தும் ஒழிக்க வேண்டும்" என்று அவர் குறிப்பிட்டிருப்பதை இந்திய அரசியல் தலைவர்களும், ஆளவந்தார்களும், ஆதிக்க வகுப்பினரும் நன்குணரவேண்டும்.

தீண்டாமை, சட்டத்தினால் ஒழிக்கப்பட்டு விட்டது; மக்களின் மனப்பான்மை தீண்டாமையை, முழுவதும் ஒழிக்கப் போதுமான அளவு பக்குவப் படவில்லை என்பதை டாக்டர் ஜான்சன் அறிவிக்கிறார். ஆதிக்க வெறி மனப்பான்மை எங்கு-எந்த உருவில்-எப்படி இருந்தாலும் அதை ஒழித்துக் கட்டவேண்டும் என்ற குறிக்கோளில்தான், திராவிடத்தைப் பொறுத்த வரையில், திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபட்டுவருகிறது.

அரசியல்--பொருளாதாரம்-சமுதாயம் ஆகியவற்றில் ஆதிக்கவெறி நிலவும் வரையில், உலகில் அமைதி நிலவ வழியேற்படாது என்று நீக்ரோ தலைவர் கூறும் கருத்து போற்றி வரவேற்கத்தக்கதாகும். ஏகாதிபத்தியம்—நிறவேற்றுமை-ஜாதி-மத வேற்றுமை--பசி--பிணி—வறுமை ஆகியவற்றை அகற்றுவதே உலகில் அமைதி நிலவ வழி பாரும்! அந்த வழியைக்காண முற்போக்குச் சக்திகள் அனைத்தும் திரளுமாக!

அமெரிக்கப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதனை மறுப்பதும் கடினந்தான்.

உலகில் வறுமையும், துயரும் மேலிட்டு வருவதைக் களைய கிறிஸ்தவ சர்ச் நிலையங்கள் குறிப்பிடத் தக்க அளவில் ஏதும் செய்யாதது நன்கு தற்தரியதேயாகும். உலகப் பெருமதங்களின் அனைத்து நிலையங்களினுடைய பவும் (ஆலயங்கள்) உறுப்பினர்களிடம் கம்யூனிஸ்டுகளிடமிருப்பதைப் போன்ற உணர்ச்சி-மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்ற உணர்ச்சி—பாதி அளவுக்கு இருந்தாற்போதும், கம்யூனிஸத்தைப் பற்றி நாம் பயப்படவேண்டிய அவசியமேயில்லை"

எஸ். எஸ். எல். ஸி. யில் தவறிய மாணவர்கள்

மார்ச்தேர்வுக்கு படிக்க வேண்டிய புத்தகங்கள்

சென்ற 1949-ம் ஆண்டு அக்டோபரில் நடைபெற்ற எஸ். எஸ். எல். ஸி. தேர்வில் தவறி 1950 மார்ச்சில் நடைபெறும் பரீட்சைக்குப் போகும் மாணவர்கள் 1950-ம் ஆண்டு மார்ச் மாத எஸ். எஸ். எல். ஸி தேர்வுக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ள ஆங்கில பாட புத்தகங்களையும், மொழிபாட புத்தகங்களையும் படிக்க வேண்டுமென்று கூறப்படுகிறது. அதாவது 1949 அக்டோபர் தேர்வுக்கு நியமிக்கப் பட்டிருந்த புத்தகங்கள் அல்லாமல் வேறு புது புத்தகங்களை ஆங்கிலத்துக்கும் மொழிபாடத்துக்கும் படித்தாக வேண்டும்.

அறிவுக் கதிர்!

மனிதன் தன் சூழ்நிலையால் உருப்பெறுகிறான். சூழ்நிலை சரியாக இருந்தால் அவன் வளர்ச்சியடைகிறான். அனுகூலமாயில்லாதிருப்பின், அவனது வளர்ச்சி தடைபடுகிறது. அதாவது, சமூக ஸ்தாபனங்கள் பரிபக்குவ மற்றும், திட்டமான முன் யோசனையில்லாமலும், இருந்தால் மக்கள் வளர்ச்சி குன்றி அவதிப்படுவர். ஆனால், சூழ்நிலையில் சீர்திருத்தங்கள் ஏற்படின், மக்கள் அபிவிருத்தியடைவது திண்ணம்.

—லாக்

அமெரிக்காவின் டாலர் தானம் நீளுகிறது!

தெ. கி. ஆசிய நாடுகளுக்கும் உதவி அளிக்க உத்தேசம்

கம்யூனிசத்தைத் தடை செய்யப் போகிறாராம் தோழர் ட்ரூமன்!

"உலக மெங்கும் மக்கள் சுதந்திரத்தையும் நல்வாழ்வையும் நாடுகின்றனர். ஆனால் கம்யூனிசத்தின் பொல்லாத வாக்குறுதிகளில் மதிமயங்கிவிடக் கூடிய அபாயமிருக்கிறது. கம்யூனிசப் படைத்தும் ஆதிக்கம் போராட்டம் ஈவு, இரக்கமற்றது; நமது குறைபாடுகளையெல்லாம் அது பயன்படுத்திக் கொள்கிறது. நல்வாழ்வை அடைவதற்கு ஜனநாயக சமுதாயங்கள் செய்யும் முயற்சி பயனளிக்க அதிக நாளாகிறது இந்தத் தாமதத்தைக் கம்யூனிசம் தனக்கு சாதகமாகப் பயன் படுத்திக்கொள்கிறது."

என்று அமெரிக்கத் தலைவர் தோழர் ட்ரூமன் அண்மையில் பார்லிமெண்டில் பேசிய போது குறிப்பிட்டிருக்கிறார். தென் கிழக்கு ஆசியாவில் பொருளாதாரத் துறையில் பின் தங்கிவிட்ட நாடுகளுக்கு உதவி அளிப்பது பற்றிய தனது "4-வது அம்ச" திட்டத்தை அமுல் நடத்தி வைக்குமாறு கேட்டுக் கொள்ளும் முறையில் அவர் மேற்கண்டவாறு பேசியிருக்கிறார்.

மேற்கு ஐரோப்பிய நாடுகள் மீது அன்று கருணை பிறந்தது போல், இன்று தென் கிழக்கு ஆசிய நாடுகள் மீது கருணை பிறந்திருக்கிறது, நம் உலகின் அதிபதியாகிய தோழர் ட்ரூமனுக்கு! உலக மக்கள் கம்யூனிசத்தின் பொல்லாத வாக்குறுதிகளில் மயங்கிவிடுகிறார்களாம், அதிலிருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டுமாம். இதுதான் அந்தக் கருணைக்கு அடிப்படைக் காரணம்! மார்ஷல் திட்ட உதவி என்ற பெயரில் உலக நாடுகளுக்கெல்லாம் டாலரை அள்ளிக் கொடுத்து அந்நாடுகளையெல்லாம் அடிமைகொண்டு, அதன் மூலம் ரஷியாவுக்கு எதிராக ஒரு எதிர்ப்பு முன்னணி அமைக்கும் திருப்பணியை மேற்கொண்டிருக்கும் அமெரிக்கா, உலக நாடுகளுக்காக முதலைக் கண்ணீர் வடிக்கிறது.

மக்களுக்கு நல்வாழ்வளிக்கும் முயற்சிக்கு அதிக நாளாகுமாம் அதற்குள் கம்யூனிசம் இந்த நிலைமையைத் தனக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொள்ளுகிறதாம். ஆகா! என்ன அழகான வாதம்! மக்களுக்கு நல்வாழ்வளிக்கும் திட்டம் நடைபெறுவதற்கு அதிக நாளாகிறதாம். இது இந்த இருபதாம் நூற்றாண்டில் முதலாளித்வம், நேச ஆரம்பித்திருக்கும் பித்தலாட்டப் பேச்சு. உலகில் வறுமை நீங்கி வாழ்வளிக்கும் பொருளாதார சமத்துவ மொன்றே சிறந்த வழி என்பதை உணர்ந்து, அதனை அமுல் நடத்த அனைத்து உலகமும் முனைந்திருக்கும் இக்காலில் இப்பொழுதுதான் புது வாழ்வுக்கு புதுப் பாதை கண்டு பிடிக்கிறார்களாம் இந்த மேதைகள்! இந்நிலையில் கம்யூனிசம் வேகமாகப் பரவுவதில் ஆச்சரியமென்ன?

எனவே, தோழர் ட்ரூமனின் பேச்சுக்கள் ஏற்கக்குதவாதவை, கருத்துக்கும் பொருந்தாதவை. பின் தங்கிய நாடுகளுக்கு உதவி அளிப்பது என்ற பேச்சு பித்தலாட்டப் பேச்சாகும். பின் தங்கிய நாடுகளுக்குப் பிச்சையளிக்க இவர்கள் யார் என்று கேட்கிறோம். அந்தந்த நாட்டின் பொருளாதாரங்களைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டிய பொறுப்பு அந்தந்த நாட்டு அரசியல் வாதிகளின் பொறுப்பு இந்தப் பொறுப்பை நிறைவேற்றும் அறிவும் ஆற்றலும் உள்ளவர்கள் அங்கெங்கும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களுக்கு வெளிநாட்டு உதவி எந்த அளவுக்குத் தேவையோ அந்த அளவு உதவியை அன்னிய நாடுகளிடமிருந்து பெற்றுக்கொள்ள அவர்களுக்குத் தெரியும். அவர்களுக்கெல்லாம் காப்பாளராக இருக்கும் அருகதையான பொறுப்பு அமெரிக்காவுக்குத் தேவையில்லை.

எனவே, ஆழ்ந்தறியாமல் தலையிட்டுக்கொண்டு அலைப்பட வேண்டாமென்று அமெரிக்காவுக்கு எச்சரிக்கை விடுக்க விரும்புகிறோம். அதே சமயத்தில், அமெரிக்காவின் டாலர் உதவியை நம்பி இந்தியாவும் மற்ற ஆசிய நாடுகளும் ஏமாந்துவிடக் கூடாது என்பதையும் வலியுறுத்திக் கூறுகிறோம். டாலர் உதவியானால் பொருளாதார வேற்றுமைகள் ஒழிந்துவிடா. பொதுவுடைமைத் தத்துவம் ஒன்றுதான் அந்த சிக்கலைத் தீர்த்து நாட்டைச் சீர்படுத்த வல்லது.

திருச்சி திராவிட மாணவர்முன்னேற்றக் கழகம்

தி. தி. மா. மு. கழகத்தின் துவக்க விழா 8—1—50 ஞாயிறு காலை 9-மணிக்குத் திருச்சி பி. ஆர். தேவர் ஹாலில் நடைபெறும்.

தோழர்கள்

சி.என். அண்ணாத்துரை

என். வி. நடராசன்

கே. ஏ. மதியழகன்

ஆகியோர்

சொற்பொழிவாற்றுவார்கள்.

பத்திரிகையாளர்கட்குப் பரிசு

பத்திரிகைத் தொழிலில் திறமை சாலிகளாயிருப்பவர்களுக்குப் பரிசுகள் வழங்க பிலிப்பைன் நாட்டுத் தலைவர் திட்டமிட்டிருக்கிறாராம், நமது நாட்டில் பத்திரிகைத் தொழிலை சமூகத் தொண்டுக்கு ஏற்ற சிறந்ததொரு ஸ்தாபனமாகச் செய்வதே இதன் நோக்கம் என்று சொல்லப்படுகிறது.

சரியெனப் பட்டதைத் துணிவுடன் கூறுக!

—————(0)—————

ஆட்சியாளருக்கு அறிவுரை தர ஆற்றல் மிக்க ஏடுகள் தேவை

—————:(0):—————

ஜனநாயகம் தழைக்க ராஜேந்திரர் காட்டும் வழி

நிர்வாகிகளாகவோ அல்லது கவர்னர்களாகவோ ஆக ஆசைப்படுபவர்கள், பொது மக்களின் நலன்களுக்கு எதிரான எந்தக் காரியத்தையும் செய்ய முடியாதபடி தடுக்க பொதுமக்களின் அபிப்பிராயம் திரண்டெழுவேண்டும். இல்லாவிடில் ஜனநாயகமே இயங்க முடியாது. ஆகையால் சர்க்கார் கொள்கைகள் கண்டிக்கப்பட்டாலும், சக்திவாய்ந்த பத்திரிகைகள் மிகவும் உஷாராக இருந்தாலும் இவைகளை வரவேற்க வேண்டும். மக்கள் கருத்தைத் தெரிவிப்பதில் சக்திவாய்ந்த பத்திரிகைகளையும் வரவேற்கவேண்டும். கொஞ்சம் கூட பயமில்லாமல் கூறப்படும் பொதுஜன அபிப்பிராயங்களை வரவேற்க வேண்டும்''

என்று, சென்னை நகராண்மைக் கழக வரவேற்புக்கும் பதிலளிக்கையில் தோழர் ராஜேந்திர பிரசாத் கூறியிருக்கிறார்.

ஜனநாயகத்துக்கு மதிப்பு தராமல், பல அரசியல் அறிஞர்களின் அறிவுரைகளையெல்லாம் புறக்கணித்துவிட்டு, அடிக்கடி அவசரச் சட்டங்களையும், அடக்குமுறை சட்டங்களையும் தயாரித்து வைத்துக்கொண்டு சர்வாதிகார ஆட்சி நடத்தத் துணிந்திருக்கும் இந்திய அரசாங்கத்தின் மூர்த்திகளில் ஒருவரான தோழர் ராஜேந்திரருக்கு இதுகாறுமில்லாத ஜனநாயக உணர்ச்சி, திராவிடநாட்டு மண்ணில் அடிவைத்தவுடன் உதயமாகியிருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறோம். சிறிதளவாவது ஜனநாயகக் கொள்கைக்கு அடிகோலும் சக்தியைப் பெற்றுள்ள தன்மைக்கு இதோர் எடுத்துக்காட்டு.

பத்திரிகைகளின் கடமைபற்றி மக்களுக்காகப் பேசியிருக்கும் ராஜேந்திரரைப் பாராட்டுகிறோம். நல்ல கருத்தை காட்டியிருக்கும் தக்க அன்னாருக்கு நன்றியும் செலுத்துகிறோம். ஆனால் தோழர் ராஜேந்திரர் கூறும் ஜனநாயகம் எந்த அளவில் கடைப்பிடிக்கப்படுகிறது என்பதைத்தான் அறிய ஆவல் கொள்ளுகிறோம்.

நிர்வாகிகளோ, கவர்னர்களோ பொதுமக்களின் நலன்களுக்கு எதிராக எந்தக் காரியத்தையும் செய்ய முடியாதபடி தடுக்க பொதுமக்களின் அபிப்பிராயம் திரண்டெழ வேண்டும் என்று கூறும் ராஜேந்திரரைக் கேட்கிறோம், பொதுமக்களின் நலன் இன்றைய ஆட்சியாளரால் எந்த அளவுக்கு கவனிக்கப் படுகிறது? உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் இன்றி வாடும் எண்ணற்ற மக்களின் குறைகள் எவ்வளவு தூரம் கவனிக்கப்படுகிறது? தொழிலாளர் நலம் கருதி ஆட்சியாளர் செய்த உருப்படியான காரியங்கள் என்ன? தேசிய தொழிற் சங்கம் என்ற தோலித் தொழிற் சங்கத்தைத் போற்றுவித்து, அதனுள் தொழிலாளரிடையே போராட்டத்தை வளர்ச் செய்து, தொழிலாளரைப் பிரித்தல்லவா தவிர வேறு என்ன நலன் கண்டது தொழில் உலகம்?

தமிழ் நாட்டில் இந்தி மொழி கட்டாயமாகத் திணிக்கப் படுகிறது; இது கூடாது சரியல்ல, நீதியல்ல என்று அறிவுரை தருவோர் மீது அடக்கு முறை பாணம் தொடுக்கப்படுகிறது. நாட்டில் பகுத்தறிவுக் கொள்கையைப் பரப்புவோரை நாஸ்திகர்களென்றும், வகுப்புவாதிகள் என்றும் கூறி, அப்படிப்பட்டோரை பெல்லாம் அடக்க முயலுகிறது அரசாங்கம். காரணங்கள் காட்டாமல், அறிவுக் களஞ்சியங்களான கருத்தரிவு வெளியீடுகளைத் தடை செய்கிறது, எழுதியவர்களையும் அச்சிட்டோரையும் அரசாங்கம் மிரட்டுகிறது. அச்சகங்களுக்கு ஆயிரக்கணக்கில் ஜாமீன்; பத்திரிகைகளுக்கும் பல்லாயிரம் ஜாமீன் என்ற நிலை நீடித்துக்கொண்டே போகிறது. இவையெல்லாம் ஏன்? இவை தான் பொதுநலம் கருதும் புண்ணியர்களின் செயலா? இவையெல்லாம் பொதுநலத்துக்கு உகந்த காரியங்கள் என்று கருதுகிறாரா தோழர் ராஜேந்திரர்?

பொதுமக்களின் நலத்துக்கு எதிரான எந்தக் காரியத்தையும் நடைசெய்ய பொதுமக்கள் சக்தி திரண்டெழ வேண்டுமென்று கூறும் ராஜேந்திரர், பொதுமக்கள் நலத்துக்கும் புறம்பான இந்த காரியங்களுக்கு எதிராக இந்நாட்டில் திரண்டெழுந்திருக்கும் அபிப்பிராயத்துக்கு என்ன மதிப்பு கொடுக்கிறார் என்று கேட்கிறோம். இது தென்னாட்டில் திராவிடர் இயக்கம் பரப்பிவரும் கொள்கைகளும், எடுத்துக்காட்டும் குறைபாடுகளும் அவருக்குத் தெரியாதவையா?

குற்றம் குறைகள் எடுத்துக் காட்டப்பட்டால் அவற்றை வரவேற்கவேண்டும் என்கிறார் ராஜேந்திரர். நாம் கூறுகிறோம் அவற்றை வரவேற்காவிட்டாலும் பரவாயில்லை; குற்றங்குறைகளைக் கூறுவோரைக் கண்டிக்காமலிருக்கும் நோக்கம் புரிய சர்க்கார் முதலில் முன்வரட்டும் என்று அதுவே அவர்கள் செய்ய வேண்டிய ஜனநாயகப் பணியாகும்.

ராஜேந்திர பிரசாத் அவர்கள் உண்மையிலேயே ஜனநாயக மகானா அல்லது உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகிறவரோ நாமறியோம். ஆனால் சம்பவங்கள் போகிறதும். அவர் சொல்லியிருப்பதைச் செயலில் காட்ட சென்னைமாகாணம் சித்தமாக இருக்கிறது. பாசிசத்தை எதிர்த்து இம்மாகாணம் அறப்போர் தொடுக்கும் போது தான் அவர் நாட்டிலில்லை ஆதற்கான அரசியலார் மனம் திருந்தி நல்ல முடிவுக்கு வருவார்களாக.

தோழர் ராஜேந்திரர் தேனும் பேசுகையில் சக்தி வாய்ந்த பத்திரிகைகள் இருந்தால்தான் ஜனநாயகம் வெற்றிகரமாக இயங்கும் என்று கூறியுள்ளதும் கவனிக்கத் தக்கது.

சக்திவாய்ந்த பத்திரிகைகள்! ஆ! எத்தனை சக்திவாய்ந்த பத்திரிகைகளாக இன்றைய தினம் இயங்கிக் கொண்டிருப்பவை திராவிடர் இயக்கப் பத்திரிகைகளே என்பது நாடறிந்த உண்மை. எனவே அப்பேற்பட்ட ஏடுகளின் ஜனநாயக அறிவுப் பணிக்கு அரசினர் முட்டுக் கட்டை போடாதிருக்க பார்க்கட்டும், உண்மையிலேயே இவர்களுக்கு ஜனநாயகத்தில் நாட்டமிருந்தால்.

பொதுவாக, எந்த அரசினரும் நம் எதிர்க்கட்சி இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். எதிர்க்கட்சி இல்லாவிடில் ஆட்சியாளரிடம் மதேச்சாதிகாரம் குடிகொண்டுவிடும். அதனால் பின்னர் ஆட்சிக்கே ஆபத்து நேரிடுவதுண்டு. அதனால் தான் நல்லாட்சி நடத்த விழைவோர் எதிர்ப்பாளரின் இடித்துரைகளை ஏற்று அதற்கேற்ப தமது போக்கை மாற்றிக்கொள்வர். ஆனால் நம் அரசியலார்க்கு அத்தகைய எண்ணம் இருப்பதாகத் தெரியவில்லை. இது மிகமிக வருந்தத்தக்கது. "இடிப்பாரையில்லா வேமரா மன்னன் கெடுப்பாரிலானும் கெடும்" என்றார் வள்ளுவர். எனவே மாற்றுக்கட்சி ஏடுகளுக்கு மதிப்பு கொடுத்து, அவை செய்யவேண்டியது அரசியலார் கடன். இன்றேல் வள்ளுவர் வாக்குப்படி ஆட்சி கெடுப்பாரில்லாமல் தானுகவே கெடும் என்பதை உணர்வார்களாக.

முத்தியாலுப் பேட்டை திருவள்ளுவர் இளைஞர் கழகம்

——

வ. உ. சி. நாள் கூட்டம்

சென்னை, ஜன 1—

இக்கழகத்தின் ஆதரவில் இன்று காலை வ. உ. சி. நாள் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. கழகத் தலைவர் தோழர் பி. வீரராகவன் தலைமை வகித்தார்.

சென்னை திருவள்ளுவர் கழகத் தலைவர் தோழர் அ. கி. பரந்தாமனார் வ. உ. சி பற்றி ஓர் அரிய சொற்பொழி வாற்றினர். வீரம் செறிந்த தேசபக்தர்களின் உண்மை வாழ்க்கை வரலாறுகள் சுதந்திர மடைந்துள்ள நமக்கு மிகவும் அவசியமென்றும் அதன் பலன்கள் பல சிறப்புக்களைத் தரக்கூடியதென்றும் கூறி, சிதம்பரம்பிள்ளை அவர்களின் அக்கால வீரச் செயல்களை நன்கு எடுத்துக்கூறினர். "போர்க்களத்தில் உயிர்விடுதல்மட்டும் வீரமன்று, வாழ்க்கை மேடு பள்ளங்களில் வீழ்ந்து எழுந்து, வறுமையிலும் கூட நாட்டிற்கும், நாட்டுமக்கட்கும் தொண்டுசெய்வது மிகமிகப் பெரிய வீரச் செயலாகும்" என்று கூறி வ. உ. சி. பிரிட்டிஷ் ஏதேச்சாதிகாரத்தை எதிர்த்து தொண்டாற்றிய வீர நிகழ்ச்சிகளை விவரித்தார் மற்றும் வ. உ. சி. அவர்கள் சுதேசி கப்பல் வாணிபம் நடத்திய சிறப்பினையும், தமிழுக்கு அவர் செய்துள்ள தொண்டினையும் விளக்கிக் கூறினர்.

திரு. கோ. முத்து. பி. ஏ. நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

கழகத் துணைச் செயலாளர் பத்மநாபன் அவர்கள் தந்தை இயற்கை எய்தியது குறித்து ஒரு அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்ட -

(ஒ-சி)

கோவை மாவட்ட தி. மு. கழ[கத்தின்]

முதல் மாநாடு

29—1—50 ஞாயிறு காலை 9-மணிக்[கு]

க[ணி]யூர் "அர்ச்சுனன் பந்தல்[ி]ல்"

நடைபெறும்

திருவண்ணாமலை நகரசபைத் தலைவர்

தோழர் ப. உ. சண்முகம் அவர்கள்

தலைமைவகிப்பார்

பெருக்குறிச்சி பெருநிலக்கிழவர்

தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள்

மாநாட்டைத் துவக்கிவைப்பார்

★

இரவு 9-30 மணிக்கு

சி. என். ஏ., கே. ஆர். ஆர். ஆகியோர் நடிக்கு[ம்]

"சந்திரமோகன்" நாடகம் நடைபெறு[ம்]

விவரங்கட்கு :— கே. ஏ. முருகேசன்,

செயலாளர், கோ. மா. தி. மு. க. முதல் மாநா[டு]

கணியூர், கோவை மாவட்டம்.

காமன்வெல்த் மாநாடு

கொழும்பு, ஜன 5—

கொழும்புவில் கூடும் காமன்வெல்த் மாநாட்டில் இந்திய தூதுகோஷ்டியில் ஹைகமிஷனர் கிருஷ்ண மேனனும், பாகிஸ்தான் தூதுக் குழுவில் ஹைகமிஷனர் ஹபீப்ரஹிமதுல்லாவும் இருப்பர் என்று தெரிகிறது.

பாகிஸ்தான் தூதுக்கோஷ்டியின் தலைவராக ஸர் ஜபருல்லாவை அனுப்ப ஏற்கனவே முடிவு செய்யப்பட்டிருந்தது. இப்பொழுது அவருக்குப் பதிலாக பாகிஸ்தான் நிதிமந்திரி குலாம் முகம்மது தூதுகோஷ்டியின் தலைவராகச் செல்வார்.

பண்டித நேரு தன் மகள் இந்திரவுடன். ஞாயிறன்று மாலை வந்து சேருவார் என்று தெரிகிறது.

———

இலங்கையும் இந்தியாவை பின்பற்றி குடியரசாகவேண்டும்

கொழும்பு, ஜன. 5—

இந்தியாவைப் பின்பற்றி இலங்கையும் குடியரசாக வேண்டுமென்ற தீர்மானத்தை இலங்கையின் பலமான அரசியல் கட்சியான இலங்கை தேசிய காங்கிரஸ் நிறைவேற்ற விருக்கிறது.

பிரிட்டனிடம் கடல் விமான தளங்களை உபயோகிக்க சம்மதிப்பது இலங்கையின் சுதந்திரத்திற்கு பாதகமானது என்றும் அதற்காக இருந்து வரும் உடன்படிக்கைகளை ரத்து செய்ய வேண்டுமென்றும் இக்கட்சி ஒரு தீர்மானத்தைக் கொண்டுவரவிருக்கிறது.

———

யூரேனியம் உற்பத்தி

அடிலெயட், ஜன. 5—

தென் ஆஸ்திரேலியாவில் யூரேனியம் உற்பத்தி இவ்வாண்டு ஆரம்பமாகி விடும் என்று ஆஸ்திரேலியா பிரதம மந்திரி ப்ளேபோர்ட் கூறினர். ஆரம்பத்தில் உற்பத்தி மிகக் குறைவாக இருந்தபோதிலும், மிக முக்கியமான தொழிலின் ஆரம்பமாகும் இது என்று கூறினர்.

தவுட்டுப்பாளையம்

தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

9—1—50 திங்கட்கிழமை மாலை 6-மணிக்கு நடைபெறும்

தோழர்கள் :

சி. என். அண்ணாதுரை

ஜி. பராங்குசம்

ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

கம்யூனிஸம் பற்றி பிரிட்டிஷ் சர்க்கார் கருத்து

லண்டன், ஜன. 5—

'மான்செஸ்டர் கார்டியன்' இன்று எழுதுகையில் கம்யூனிஸத்தைத் தடுத்துக்காமல்லுகேக, வட அட்லாண்டிக் ராணுவ உடன்படிக்கை போல் எதுவும் அவசியமில்லை என்றும், ஆசியாவின் நிலைமை சீர்தாம் செய்யப்பட்டு பொருளாதார நெருக்கடி தீர்க்கப்பட்டாலே கம்யூனிசம் செத்துவிடும் என்று, பிரிட்டிஷ் சர்க்கார் கருதுகின்றனர் என்று குறிப்பிட்டிருக்கிறது.

———

டாக்ஸி டிரைவர்கள் ஸ்டிரைக்

மாட்ரிட், ஜன. 5—

மாட்ரிட் நகரில் 4000 டாக்ஸி டிரைவர்கள் ஸ்டிரைக் செய்து விட்டனர். மாதா மாதம் கொடுக்கப்படும் 46 காலன் பெட்ரோல் 'கோட்டா'வை 33 காலனாக குறைத்ததை ஆட்சேபித்தே இவர்கள் வேலை நிறுத்தம் செய்தனராம்.

—குளோப்

———

இஸ்ரேலில் கம்யூனிஸ்டு கைகலப்பு

ஜெய்போ, ஜன. 5—

இஸ்ரேலில் குடியேறிய கம்யூனிஸ்டுகளும் சர்க்கார் படையினரும் கைகலந்தனர் என்றும் இதில் 12 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர் என்றும் இங்கு செய்தி கிடைத்திருக்கிறது.

[illegible]வெல்த் மாநாட்டு வரும் பிரச்னைகள்

லண்டன், ஜன. 4—

[illegible]த்த வாரம் கொழும்பு கூடவிருக்கும் காமன் [illegible]த்மாநாட்டில், பின்வரு[illegible]னைகள் முதலி[illegible]ம்பெறும் [illegible] நிச்சயமாகத் தெரிய[illegible]:

[illegible]முனிஸ்டு ஆ[illegible]த்தைத் [illegible]ம் நாடுகள்.

[illegible] பான்சமாதானஉடன் [illegible] விஷயம்.

[illegible]ற்கு யூனியன் காமன்[illegible] சம்பந்தப்பட்ட விவ[illegible]ம்.

[illegible]ப் யூனிஸ்டு எதிர்ப்பு நட[illegible]க்கை விஷயத்தில், தென் [illegible]பிரிக்கா விசேஷ சிரத்தை [illegible]டுவதாகத் தெரிகிறது. [illegible]யாவுடன் ராஜீய உறவை [illegible]றுத்துக்கொள்ளும் அள[illegible]குத் தென் ஆப்ரிகா தயா[illegible] இருப்பதாக கூறப்படு[illegible]து.

[illegible]ஞ கம்யூனிஸ்டு சர்க்காரை [illegible]ந்தியா அங்கீகரித்திருப்ப[illegible]கவும், அமெரிக்காவின் [illegible]ண்ணம் இவ்விஷயமாக இன்[illegible]ம் தெரியவில்லை என்பதா[illegible]ம், இப்பிரச்னை சிக்கலாயிருக்[illegible]து. இவ்விஷயங்களும் விவா[illegible]க்கப்படலாம்.

சென்னை கைத்தறி நெசவுத் தொழிலாளர் கூட்டுறவு சங்கம்

சென்னை, ஜன. 4—

சென்னை கிறிஸ்தவக் கல்லூரி (ஜார்ஜ்டவுனில்) சமீபத்தில் நடந்த கூட்டத்தில் சென்னை மாகாணத் தைத் தனி நெசவாளர்களின் கூட்டுறவு சங்கத்தின் கூட்டத்தில் ஆந்திர மாகாணச் சங்கமென்றும், சென்னை மாகாண சங்கமென்றும் பிரிக்கப்பட்டிருக்கின்றது.

இவ்விரு சங்கங்களின் ஆஸ்திகளையும், பொறுப்புகளையும் கவனிக்க சங்கம் ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இக்கமிட்டி சென்னையில் இம்மாதம் கூடுமென்று தெரியவருகிறது.

ஆஸ்திரேலியாவில் எண்ணெய் வேட்டை

லண்டன், ஜன. 4—

ஆஸ்திரேலியா, நியூகினி, பாபுவா ஆகிய நாடுகளில் எண்ணெய் எங்கெல்லாம் கிடைக்கிறது என்று மும்முரமாகத் தேடப்பட்டு வருகிறது. இதுவரை பெரும் பலன் கிடைக்கவில்லை என்றாலும், எண்ணெய் பெருத்த அளவில் கிடைக்கும் என்ற நம்பிக்கை மட்டும் இன்னும் இருந்துகொண்டேதான் இருக்கிறது.

இப்பொழுது ஆஸ்திரேலியாவில் பெட்ரோலியம் இறக்குமதி ஏகமாக அதிகரித்து விட்டது. பிறநாடுகளி[illegible]ம் எண்ணெய் சப்ளையை எதிர்பார்க்காமலிருக்கவே எண்ணெய் வயல்கள் தேடப்பட்டு வருகின்றன.

பாகவதருக்குப் பாராட்டு

"ஏழிசை மன்னர்" "இன்னிசை வேந்தரு"மானர்

சென்னை, ஜன 2—

சென்னை விசுவகர்ம மகாஜன சங்கத்தின் சார்பில், செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் தோழர் எம். கே. தியாகராச பாகவதரைப் பாராட்டுவதற்காக ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு தோழர் டி. எம். தெய்வசிகாமணி தலைமை வகித்தார். தலைவர் தம் முன்னுரையில் தோழர் எம். கே. தியாகராச பாகவதரின் கலைத்திறனையும், நற்பண்புகளையும் குறித்து சொற்பொழிவாற்றினர். தோழர் டி. பி. பாலசுப்பிரமணியம் பாகவதருக்கு ஓர் வாழ்த்திதழ் படித்தளித்தார்.

பிறகு வன்மொழிப் புலவர் டி. பி. மீனாட்சிசுந்தரனர் சபையாரின் சார்பில் 'இன்னிசை வேந்தர்' என்ற பட்டத்தைப் பாகவதருக்கு வழங்கினர். பின்பு பாகவதருக்குப் பல மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு, பொன்னுடை போர்த்தப்பட்டது.

பின்பு தோழர்கள் அன்புகணபதி, எஸ். டி. ராஜு, பி. எஸ். செட்டியார் முதலியோர் பாகவதரைப் பாராட்டிப் பேசினர். பாகவதர் பாராட்டுக்கு நன்றி தெரிவிக்குமுகத்தான் சிறிது நேரம் பேசி, சில பாட்டுகள் பாடி மகிழ்வித்தார்.

தி. மு. கழகப் பொதுக் கூட்டங்கள்

—(0)—

சென்னை-பெரம்பூர்

சென்னை, டிச. 28—

பெரம்பூர் தி. மு. க. துவக்க விழா கூட்டம் சனி கிழமை 24-12-49 அன்று மாலை 6-மணிக்கு பெரம்பூர் ஏரிமைதானத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது அதுபோது மக்கள் 2000 க்கு மேல் குழுமியிருந்தனர். அவ்விழாவிற்குத் தோழர் சிதம்பரம் முன்மொழிய, தோழர் இளங்கோ வழிமொழிய தோழர் வேணிகாசலம் தலைமை வகித்தார்.

தோழர் சி. டி. அரசு அவர்கள் திராவிட நாட்டுப் பண் பாடிய பின்பு தலைவர் முன்னுரையுடன் தோழர்கள் காஞ்சி மணிமொழியார் இரா. இளம்வழுதி ஆகியோர் தற்கால அரசியல் நிலையை வெகு விரிவாகவும், விளக்கத்துடனும் எடுத்துரைத்து திராவிட முன்னேற்றக் கழக கொள்கையையும், அவசியத்தையும் பற்றி எடுத்துரைத்தனர். பின்பு பலத்த கைதட்டலுக்கிடையே தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அரசியல், சமுதாயம், பொருளாதாரம் என்ற பொருளை விளக்கிக்காட்டி, இம்மூன்று துறையிலும் முன்னேற வேண்டியதின் அவசியத்தையும், தற்கால அரசியலைப் பற்றியும், அரசியலார் போக்கையும், அதிகார ஆணவத்தையும் தவறான போக்கையும் எடுத்துக் காட்டி கண்டித்தும் அமைச்சர்களும், அதிகார கட்சியினரும் பொதுமக்கள் பணத்தை (புள்ளி விவரங்களோடு காட்டி) வீணான வழியில் செலவு செய்து வரும் போக்கையும் கண்டித்துப் பேசி, நாடு முன்னேற வேண்டிய வழிகளையும், சீர்திருத்தங்களையும், கொள்கைகளின் அவசியத்தையும் எடுத்து விளக்கி நீண்டதோர் சொற்பெருக்காற்றினர். பின்பு தலைவர் பின்னுரையுடன் தோழர் சம்பத்குமார் வாழ்த்துப் பாட கூட்டம் இரவு 9-மணிக்கு இனிது முடிந்தது. (வி-உ)

—— — ——

பனையப்பட்டி

பனையப்பட்டி, டிச. 30—

28—12—49 ல் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த பனையப்பட்டியில் பாலூர் சத்திரப் தோழர் கே. தங்கரத்தினம் அவர்கள் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழாப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது தூத்துக்குடி எஸ் நடராசன், எம். எஸ். சிவசுவாமி ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினர்கள் (வி-உ)

—— — ——

கீழப்பாவூர்

கீழப்பாவூர், ஜன. 1—

27-12-49 ல நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த கீழப்பாவூரில் தோழர் யோகநாத பாண்டியன் அவர்கள் தலைமையில் "திராவிட முன்னேற்றக் கழகத் துவக்கவிழாக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது பொட்டல்புதூர் நயினா முகம்மது, தூத்துக்குடி எஸ். நடராசன், எம். எஸ். சிவசாமி ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினர்கள். சுற்றுப்புற கிராமங்களிலிருந்து ஏராளமான இயக்கத் தோழர்களும், அனுதாபிகளும் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள்.

—— — ——

அய்யம்பாளையம்

அய்யம்பாளையம், டிச. 20—

19—12—49 திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு மதுரை மாவட்டம் அய்யம்பாளையம் கிராமத்தில் தி. மு. கழகக் கிளையின் ஆதரவில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. மதுரை மாவட்டக் கிளைத் துணைச் செயலாளரும், மத்திய கழக அமைப்புக் குழு உறுப்பினருமான தோழர் எஸ். முத்து அவர்கள் தலைமை வகித்தார். தி. மு. கழகம் மதுரை நகரக் கிளைச் செயலாளர் எம். அய்யாசாமி, ஈரோடு தோழர் எஸ். அப்பாவு ஆகியோர் தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கி அரிய சொற்பொழிவாற்றினர்கள். பின்னர் தலைவர் முடிவுரை கூற, செயலாளர் சி. இருளப்பன் அவர்களால் நன்றி கூறப்பட்டுக் கூட்டம் இனிது முடிவுற்றது. கூட்டத்திற்கு சுமார் 2000-பேர்வரை கூடியிருந்து அமைதியுடன் சொற்பொழிவைக் கேட்டார்கள். கூட்டத்திற்கு சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர் உட்பட ஒரு போலீஸ்படை வந்திருந்தது.

(வி-உ)

சென்னை மாவட்ட மாநாடு

பதிவுசெய்து கொண்ட பெண் தொண்டர்கள்

1. கோ. பவளமல்லி
   பொன்கோதண்டபாணி,
   55, பீமண்ண முதலித் தெரு,
   ஆள்வார்ப்பேட்டை.
2. உருக்குமணி பரமசிவம்,
   முண்டக்கண்ணி அம்மன்
   கோவில் தெரு, மயிலாப்பூர்.
3. தாயம்மாள்
   அருணாசல ஆச்சாரித் தெரு,
   சேப்பாக்கம்.
4. முனியம்மா அருணகிரி.
   திருவல்லிக்கேணி

மேற்கொண்டு சேர விரும்பும் தோழியர்கள் 18—1—50 க்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு நேரில் வந்தோ, கடிதம்மூலமாகவோ பதிவுசெய்து கொள்ளுமாறு வேண்டுகிறேன்,

ஏ. அலமேலு,
பெண் தொண்டர் தலைவர்,
13, அருணாசல ஆச்சாரி தெரு,
சேப்பாக்கம், சென்னை.

சந்தாதாரர்களுக்கு

சந்தாதாரர்கள் தங்கள் [illegible]களில் அனுப்பும் மணியார்டர் [illegible] தங்கள் சந்தா நம்பரைக் [illegible] [illegible] கொள்ளவேண்டுகிறோம் [illegible]

கிழக்கு-மேற்கை 'பிளாஸ்திரி' போட்டு இணைப்பதே காமன்வெல்த்மாநாடு

கொழும்புவில்கூடி உலகுக்கு உணர்த்தப்போகிருர்களாம்!

மூன்ருவது உலகப்போரையும் தடுத்து நிறுத்தத் திட்டமாம்!

லண்டன், ஜன. 5—

"கிழக்கையும் மேற்கையும் காமன்வெல்த் இணைக்கிறது என்பதை உலகிற்குக் காட்டுவதே காமன்வெல்த் மாநாட்டின் நோக்கமாகும். மூன்ருவது உலகப் போரைத் தடுப்பது, ஜனநாயகத்தைப் பலப்படுத்துவது முதலிய முக்கியமான விஷயங்கள் கொழும்பு மாநாட்டில் விவாதிக்கப்படும். இப்பிரச்னைகளில் சாத்தியமான வரையில் காமன்வெல்த் நாடுகளுக்கும், யுனைடெட் ஸ்டேட்ஸுக்குமிடையே உடன்பாடு இருப்பது நல்லது."

என்று பிரிட்டிஷ் காமன்வெல்த் உறவு மந்திரி தோழர் நோவல்பேக்கர் லண்டனை விட்டுப் புறப்படு முன் 'குளோப்' நிருபருக்களித்த தனிப் பேட்டியில் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது;—

காமன்வெல்த் நாடுகளுக்கும், மேற்கு நாடுகளுக்கும் ஒத்துழைப்பு இருக்க வேண்டியது அவசியம்.

காமன்வெல்த் மாநாடு தக்க சமயத்திலேயே கூடுகிறது. இம்மாநாட்டில் தீர்மானங்கள் எதுவும் செய்யப்படாவிட்டா[illegible] [illegible]டைபெறும் விவாதங்கள் முக்கியமான முடிவுகளைச் செய்ய வழிகாட்டும்.

பர்மாவுக்குக் காமன்வெல்த் உதவி அளிக்க வேண்டியது பற்றி ஆலோசிக்கப்படுவதுடன், மனிதகுலனுக்கான விஷயங்கள் மூன்ருவது உலகப் போரைத் தடுப்பது, ஜனநாயகம் வெற்றிபெறச்செய்வது, கிழக்கு—மேற்கு நாடுகளிடையே ஒத்துழைப்பைபெருக்குவது முதலிய விஷயங்களும் விவாதிக்கப்படும்.

இம்மாதிரி விஷயங்களில் சாத்தியமான அளவுக்குக் காமன்வெல்த் நாடுகள் யுனைடெட் ஸ்டேட்ஸுடன் ஒத்துழைக்க வேண்டியது அவசியமாகும்.

காமன்வெல்த் பொருளாதாரப் பிரச்னைகளும் இம்மாநாட்டில் விவாதிக்கப்படும். பிரிட்டிஷ் தூதுக்குழுவில் பல பொருளாதார வல்லுநர்கள் இதற்காகவே கொழும்பு செல்கின்றனர். சென்ற ஜூலையில் காமன்வெல்த் நிதி மந்திரிகள் கூட்டத்தில்விவாதிக்கப்பட்ட விஷயங்கள் இப்பொழுது தொடர்ந்து விவாதிக்கப்படும். ஆசியாவின் பகைப் புலனில் இந்த எல்லா விஷயங்களையு[illegible] விவாதிப்பதே உத்தேச[illegible]

இந்தோனேஷியா விஷ[illegible]ம் சமரசமாகதீர்க்கப்பட்டது [illegible]படி கிழக்கும் மேற்கும் ஒத்துழைக்க முடியும் என்பதையே காட்டுகிறது.

காஷ்மீர் விஷயமாக இம்மாநாட்டில் விவாதிக்கப்படுமோ என்று கேட்டதற்கு நோவல்பேக்கர் பதிலளிக்கையில், இவ்விஷயம் பற்றி தான் எதுவும் சொல்ல விரும்பவில்லை என்றும், இப்பிரச்னை பாதுகாப்பு கௌன்ஸில் முன்பு இருப்பதாகவும். அக்கௌன்ஸிலில் இவ்விஷயத்தை திருப்திகரமாக தீர்த்து வைக்கும் என்ற நம்பிக்கையைத் தான் இழக்கவில்லை என்றும் கூறினர்.

யூதர்களுக்கு ரஷ்யா ஆயுத சப்ளை

அம்மான், ஜன. 4—

பாலஸ்தீனத்தில் பிரிட்டிஷ் மான்டேட் முடிவடைந்தபின், ரஷியர்கள் யூதர்களுக்கு ராணுவ தளவாடங்களை சப்ளை செய்திருக்கின்றனர். என்பது, இப்பொழுது உறுதியாகி விட்டதாகக் கூறப்படுகிறது. நூர்கூன்மைன்சா இயக்கத்தினர்தான் இந்த சப்ளைகளைப் பெற்றதென்று யூதப் பத்திரிகைகள் கூறுகின்றன.

—— — ——

இஸ்ரேல்பற்றி மேற்கு வல்லரசுகள் முடிவு

லண்டன், ஜன. 4—

இஸ்ரேலை அங்கீகரிப்பதென்று மேற்கு யூனியன் வல்லரசுகள் தீர்மானித்திருக்கின்றன. பிரிட்டன் மட்டும் சில சட்ட நுணுக்க விஷயங்களுக்காக தாமதித்துவருகிறது என்று கூறப்படுகிறது. இன்னும் சில தினங்களில் பெல்ஜியம் சட்டரீதியான அங்கீகாரத்தை அளித்துவிடும். ஹாலந்தும் அங்கீகரிக்கும் என்றும் ராஜதந்திர வட்டாரங்களில் கூறப்படுகிறது.

தி. மு. க. பொதுக் கூட்டங்கள்

7-1-50

சென்னை 10-வது வட்டம் :—		சி. பி. சிற்றரசு, என். வி. நடராசன், காஞ்சி. மணிமொழியார்

8-1-50

புளியம்தோப்பு (சென்னை) :—		இரா. நெடுஞ்செழியன்
திருச்சி :—	(காலை)	சி. என். அண்ணாத்துரை, என் வி. நடராசன், கே. ஏ. மதியழகன்
காரைக்குடி :—	(மாலை)	சி என் அண்ணாத்துரை என் வி. நடராசன், பி. பழனிச்சாமி
மேத்தாயில்பட்டி :—		எம். எஸ். சிவசாமி, இரா. சு. தங்கப்பழம் விருதை. எம். இளஞ்செழியன்
தொண்டயம்பட்டி :—		மதுரை மன்னன், எம். எஸ். ராமசாமி, எஸ். முத்து, எம். அய்யாசாமி
கள்விக்கோட்டை :—		ஈ வெ கி சம்பத், வி. எஸ். கோனயன், ஜி. என். இராசு, எஸ். அப்பாவு

9-1-50

வட்டுப்பாளையம் :—		சி. என். அண்ணாத்துரை, ஜி பராங்குசம்

சென்னைத் துறைமுகத்தில் தொழிலாளர் வேலை நிறுத்தம்

ஆள் குறைப்புத் திட்டத்தின் விளைவு!

சென்னை, ஜன. 5—

சென்னைத் துறைமுகத்தில் மூட்டைத் தூக்கும் போர்ட்ரஸ் காங்கித் தொழிலாளர்கள் ஆள் குறைப்புத் திட்டத்தை எதிர்த்து இன்று அடையாள வேலை நிறுத்தம் செய்தனர். துறைமுகத்தின் நிர்வாக டிராபிக் மானேஜர் தோழர் எம். எஸ். வெங்கட்டராம அய்யர்தான் என்று கூறப்படுகிறது. அவர் ஆள் குறைப்புத் திட்டத்தைக் கொண்டு வந்ததின் நோக்கம் எஸ். ஆர். வி. எஸ். கம்பெனியைச் சேர்ந்த பார்ப்பனரை ஆட்கள் சப்ளை செய்யும் கண்ட்ராக்டராக நுழைக்கவும், இத்தொழிலாளருடைய தொழிற் சங்கம் ஒழிய வேண்டுமென்பதற்காகவும், இவ்வாறு மீதம் செய்து காட்டினால் தான் சேர்மென் பதவிக்கு வரலாமென்றும் இந்த மூன்று நோக்கங்களுக்காகத்தான் அவர் பணியாற்றுவதாகக் கருதப்படுகிறது. தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்ட ஒருவேளை உணவையும் 9—1—50 முதல் நிறுத்தி விடப் போவதாகத் தெரிகிறது ஆகையால் அவருடைய நிர்வாகம் நேர்மையற்றது என்பதைப் பொது மக்களுக்கும், ஆட்சியாளருக்கும் எடுத்துக்காட்டவே இந்த அடையாள வேலை நிறுத்தம் அமைதியான முறையில் செய்யப்பட்டது. ஒரு தொழிலாளர் போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். மற்ற எல்லாத் தொழிலாளர்களும் அமைதியான முறையில் காலை 9 மணிக்கு வீடு திரும்பினர்.

சர்க்கார் விடுமுறை

இந்தியக் குடியரசு துவக்க விழாவையொட்டி சென்னை சர்க்கார் ஜனவரி 26, 27-ந் தேதிகளை பொது விடுமுறை நாட்களாகப் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

இனி நடப்பவை

திருப்பத்தூர் (வ. ஆ.)— இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற் குழு கூட்டம் 8—1—50 ஞாயிறு காலை 10 மணிக்கு ஆலங்காயம் ரோடு எண் 44 உள்ள தோழர் ஆர். என். மணி அவர்கள் இல்லத்தில் நடைபெறும். அதுபோது, பொங்கல் விழாவைச் சிறப்புற நடத்துவது பற்றி ஆலோசிக்கப்படும். செயற் குழுவினர் யாவரும் தவறாது வருகை தருமாறு வேண்டப்படுகிறார்கள்.

* * *

கோவை:—8—1—50 ஞாயிறு காலை 10 மணிக்கு இவ்வூர் தி. மு. க. கிளையின் சொற்பொழிவுக் கூட்டம், கழகக் கட்டிடத்தில் நடைபெறும். பல மாணவத் தோழர்கள் கலந்துகொள்வர். ஆர்வமுள்ள கழகத் தோழர்களைவரும் அழைக்கப்படுகிறார்கள்.

* * *

சென்னை:—அகில இந்திய சித்த வைத்திய சங்கத்தின் சார்பில் 8—1—50 ஞாயிறு மாலை 5 மணிக்கு டை சங்கக் கட்டிடத்தில் (37. தாதா முத்தியப்பன் தெரு, சென்னை-1) தோழர் எம். சீனிவாசராவ் தலைமையின் ஓர் கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர் சி. என், திருவேங்கடம் "க்ஷய ரோகம்" என்பது பற்றி சொற்பொழிவாற்றுவர்.

ஏஜெண்டு தோழர்கட்கு

"மாலைமணி" ஏஜெண்டுத் தோழர்கள், தங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கும் பில் தொகையை 8-1—50 லிருந்து 10—1—50-க்குள் அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம். அனுப்பத்தவறும் தோழர்களுக்கு கண்டிப்பாக முன்னறிவிப்பின்றி பத்திரிகை நிறுத்தப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மானேஜர்
"மாலைமணி"

நீதி விசாரணைக் கமிஷன்

சென்னையில் கூடுகிறது

சென்னை ஜன 4—

நீதி விசாரணைக் கமிஷனின் சார்பில் இந்திய சுற்றுப் பிரயாண 6-ந் தேதியன்று சென்னையில் ஆரம்பமாகிறது, கமிஷன் சென்னை நகரத்தில் மூன்று நாட்கள் கூடி விசாரணை நடத்தியபின் 9-ந்தேதி மன்று பங்களூருக்குப் பயணமாகிறது. அங்கு இரண்டு நாட்கள் தங்கி விட்டு 11-ந் தேதியன்று எர்ணாகுளம் போய்ச் சேருகிறது. அங்கு மூன்று நாள் விசாரணை நடத்திய பிறகு 18-ந்தேதி அங்கிருந்து புறப்பட்டு சென்னை மார்க்கமாக டில்லி போய்ச் சேருகிறது.

சென்னையில், சென்னை வர்த்தக சபை, ஆந்திர வர்த்தக சபை, தமிழ் வர்த்தக சபை, இந்துஸ்தான் வர்த்தக சபை ஆகியவற்றின் பிரதிநிதிகள், 6-ந்தேதி முதல் கமிஷன் அங்கத்தினர்களைச் சந்தித்து சாட்சி யளிப்பார்கள். அன்று பிற்பகல் சென்னைப் பிரதமரும் மற்றும் சில மந்திரிகளும் பல்கலைக்கழகத்தின் பிரதிநிதிகளும் கமிஷனை சந்திப்பார்கள்.

7-ந்தேதியன்று, கமிஷன் சென்னை சர்க்காரின் அதிகாரபூர்வமான பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிந்துகொள்ளும். தென்னிந்திய வர்த்தக சபை, முஸ்லிம் வர்த்தக சபை, தென்னிந்திய ஆலை முதலாளிகள் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும், டி. டி. கிருஷ்ணமாச்சாரி ஏ. வி. சம்பத் அய்யங்கார் ஆகியோரும் அன்று கமிஷன் அங்கத்தினர்களைச் சந்திப்பார்கள். செட்டிநாடு ராஜாசர் எம். ஏ. முத்தையசெட்டியார்; சி. எஸ். ரத்னசபாபதி முதலியார் சர். சி.பி. ராமசாமி அய்யர், பி. என். லோகநாதன், சி. ஆர். சீனிவாசன் ஆகியோர் 8-ந் தேதியன்று கமிஷனைச் சந்தித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பார்கள்;

தோழர் வி. டி. கிருஷ்ணமாச்சாரியாரைத் தலைவராகக்கொண்ட இக்கமிட்டியில், டாக்டர் பி. எஸ். லாங்குலி, பி. எம். பிர்லா, அனந்தசயனம் அய்யங்கார்; சௌதரி முக்தார் ஸிங் சுந்தரலால் தேசாய், டி. எல். மஜூம்தார், ஆகியோர் அங்கத்தினராக இருக்கின்றனர். மஜூம்தார், இக்கமிஷன் காரியதரிசியாகவும் இருக்கிறார்.

தொழில்களுக்குப் பாதுகாப்பளிக்கும் விஷயத்தில் இந்திய சர்க்கார் 1921-ம் ஆண்டிலிருந்து அனுசரித்துவரும் கொள்கை உட்படப் பல விஷயங்கள் பற்றிக் கமிஷன் விரிவான ஆராய்ச்சி நடத்த வேண்டியிருக்கிறது. தொழில்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் விஷயத்தில் இனிமேல் அனுசரிக்கப்பட வேண்டிய கொள்கைபற்றிக் கமிஷன் தனது சிபாரிசுகளையும் தெரிவிக்கும். போர்க் காரணமாகவும் வேறு காரணங்களாலும் நாட்டில் பொருளாதார நிலைமை மிகவும் சீர்கேடடைந்திருப்பதால், கமிஷன் தனது யோசனைகளைக் கூறுவதில், இப்பிரச்னையின் குறுகியகால அம்சங்களையும், நீண்டகால அம்சங்களையும் தனித்தனியே ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டின் தற்போதைய தேவைகளையும் பொருத்து, சுங்கவரிகள் வர்த்தகம் பற்றிய பொது ஒப்பந்தம் அல்லது சர்வதேச வர்த்தக ஸ்தாபன சாஸனம் போன்ற சர்வதேச ஏற்பாடுகளில் இந்தியா எவ்வளவு தூரம் பொறுப்பேற்றுக் கொள்ளலாம் என்பது பற்றியும் கமிஷன் பரிசீலனை செய்யும்.

இந்தக் கமிஷன் சென்ற ஏப்ரலில் நியமிக்கப்பட்டது. கமிஷன் விசாரணைக்குட்பட்ட விஷயங்கள் பற்றி பொதுமக்களின் கருத்துக்களை அறிந்துகொள்ளும் பொருட்டு கமிஷன் ஒரு வினாத்தாள் தயாரித்து சென்ற ஜூனில் வெளியிட்டிருந்தது

கழக நடவடிக்கைகள்

சேலம்:—அம்மாபேட்டை பெயின்ரோடு கிளையின் சார்பில் 25—12—49-ல் நடைபெற்ற சொற்பொழிவுக் கூட்டத்தில் தோழர்கள் பி. ஆர். சோமசுந்தரம், இராதாகிருஷ்ணன், கே. கோவிண்டையா, கு. என் ராமலிங்கம், கே. எஸ். அப்துல் ரஹீம், பி. கோபாலு, ஆர். சோமசுந்தரம், என் எஸ். முத்து, எம். பி. வள்ளியப்பன், என். எஸ். சோமு ஆகியோர் "பகுத்தறிவு" என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றினர்.

* * *

நிலக்கோட்டை:— இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம் 25—12—49-ல் தோழர் அய்யாத்துரை தலைமையில் நடைபெற்றது. அதுபோது, வருகிற 14—1—50 ல் பொங்கல் விழாவை தோழர் ஈ வி, கே. சம்பத் அவர்களைக் கொண்டு மிகச் சிறப்புற நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டது. கிளைக்கு உறுப்பினர் தோழர் காதர் இப்ராகிம் தற்பொழுது இல்லாததால் தோழர் மு. தனிக்கோடி தற்காலிகமாக உறுப்பினராகப் பணியாற்றுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

(வி-உ)

* * *

கலையண்டபுரம்:—இவ்வூர் தி. மு. க. கிளையின்சார்பில் 28-12-49 தோழர் பி. ஒப்புளி தலைமையில் சொற்பொழிவுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது "தொழிற் சங்கம்" என்னும் பொருள் பற்றி தோழர்கள் கா. இலங்கோ. மா. அர்த்தநாரி, செ. சுப்பிரமணியம், கு. சி. கந்தசாமி, வி. செல்லப்பன், க. கந்தசாமி, ஆகியோர் பேசினர். இனி ஒவ்வொரு வாரமும் சொற்பொழிவுக்கூட்டம் நடைபெறும்.

* * *

கம்பம்:— இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம், தோழர் எம். ஆர். நிலத்தரு தலைமையில் நடைபெற்றது. அதுபோது, மதுரை மாவட்டக் கழகத்திற்குப் பிரதிநிதிகளாகத் தோழர்கள் என். எஸ். சுப்பையாண்டி, எஸ். ஐ. அப்துல் கதீர் ஆகிய இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்பு பொதுச்செயலாளர் மதுரை மாவட்டத்திற்குச் சுற்றுப் பிரயாணம் வரும்பொழுது இவ்வூருக்கும் அழைப்பதென முடிவு செய்யப்பட்டது.

* * *

க. புதுப்பட்டி:— இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம் 30—12—49ல் சில காரணங்களால் கூட்டமுடியாமற் போகவே ஒவ்வொரு செயற்குழுவினரிடமும் நேரிற்சென்று அவர் தம் கருத்துக்களைக்கேட்டு, தோழர்கள் என். முகம்மது மீரா எம். கே. சோலை ஆகிய இருவரும் மதுரை மாவட்டக் கழகத்திற்குப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* * *

தளவாய்புரம்:—இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக்கூட்டம். 30-12-49 ல் தோழர் மா. சின்னசாமி, தலைமையில் நடைபெற்றது. அதுபோது, இராமநாதபுரம் மாவட்டக் கழகத்திற்குத் தோழர்கள் ச. காளிமுத்து, அ. வன்னியப்பெருமாள், ஆகிய இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* * *

மாயவரம்:—இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம் 31—12—49 ல் தோழர் ஆர். பழனிச்சாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் தோழர் வை. மாணிக்கம் கழகத்தின் செயல் முறைகளை விளக்கிச் சொற்பொழிவாற்றினார். பின்பு, மிகுதாசர் பெருந்தலை செ. சி. சிதம்பரனார் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. பின்னர், வருகிற பிப்ரவரியில் தலைமைக் கழக விதிப்படி இவ்வூரில் நாடகம் ஒன்று நடத்துமாறு பொதுச் செயலாளரைக் கேட்டுக் கொண்டும், இது சம்பந்தமாக தோழர் அண்ணாத்துரை அவர்களிடம் கலந்து பேச தோழர் பழனிச்சாமிக்கு அதிகாரமளிக்கப்பட்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தஞ்சை மாவட்டக் கழகத்திற்குப் பிரதிநிதிகளாகத் தோழர்கள் ஆர். பழனிச்சாமியும், வை. மாணிக்கமும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர்கள் எ. சாமிநாதன், என். பிட்டப்பா, ஜே. சிராமணி, எஸ். எம். பாட்சா ஆகிய நால்வரும் செயற்குழு விரைவாக மேலும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

(செ-ர்)

* * *

கோலார் தங்க வயல்—இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம், 31—12—49ல் தோழர் என். சி. சுந்தரராசன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது தோழர் இராசலன் கழகவளர்ச்சிக்கான திட்டங்களை விளக்கிப்பேசினார். பின்பு 5—11—49ல் நடைபெறவிருக்கும் மாநாட்டிற்குப்பிரதிநிதிகளாகத் தோழர்கள் டி. கே. சின்னத்துரை, கே எஸ் கோபாலகிருஷ்ணன், கே.ஜி சின்னராசன், செல்வராசன், சண்முகம், ஆகியோரை அனுப்புவதெனத் தீர்மானிக்கப்பட்டது. தோழர் அண்ணாத்துரை அவர்களை சங்கமனுக்கு அழைப்பதற்காக மேற்கண்டவர்களே தூதுக்குழுவினராக அனுப்பிவைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது. 14—1—50 கழக மனையில் தமிழர் திருநாள் கொண்டாடுவது என்று தீர்மானிக்கப்பட்டு கூட்டம் முடிவுற்றது.

* * *

திருத்தங்கல்:— இவ்வூர் தி. மு. கழக செயற்குழுக் கூட்டம் 1-1-50 ஞாயிறு காலை 10 மணிக்கு "பெரியாண்டவன் நெசவு நிலையத்தில்" தோழர் மா. துரைசாமி அவர்கள் தலைமையில் கூடி, என். சுப்பிரமணியம், எஸ். காளியப்பன் ஆகிய இருவரை இராமநாதபுர மாவட்ட கழகத்திற்குப் பிரதிநிதிகளாக அனுப்புவதென தீர்மானித்து அவர்களும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

(வி-உ)

* * *

புதுவை இவ்வூர் கழகச்செயற்குழுக் கூட்டம் 1—1—50ல் நடைபெற்றது. பொதுக்குழு உறுப்பினர் தோழர் சிவப்பிரகாசம் அவர்களும் வந்திருந்தார். 22-1-50 ல் துவக்கவிழா நடத்துவதைப் பற்றியும், சொற்பொழிவாளர்கள் பற்றியும் செலவுக்கு ஆகும் தொகையை நன்கொடையாக வசூலிப்பது பற்றியும் விவாதிக்கப்பட்டபின் முடிவு செய்யப்பட்டது. தோழர் சிவப்பிரகாசம் அவர்கள் தமது ஆலோசனைகளையும்வெளியிட்டார். பின் கூட்டம் மாலை 5-15க்கு முடிவுற்றது.

(ஏ-உ)

* * *

நெடும்பலம்—சென்ற 22-11-49 ராசம்மையார் தோட்டத்தில் இவ்வூர் தி. மு. கழகக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது தஞ்சை மாவட்டக் கழகத்திற்கு நெடும்பலம் கழகத்தின் பிரதிநிதிகளாகக் கீழ்கண்ட இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். செ. தங்கவேலு, டி. எஸ், கல்யாணசுந்தரம் இருவரும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். (செ-ர்

சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம்

பொங்கல் விழாப் பொதுக்கூட்டம்

நாள் :— 14—1—50 சனி

நேரம் :— மாலை 5-30 மணி

இடம் :— ராபின்சன் பார்க் மைதானம் இராயபுரம்

தலைவர் :- டி. எம். பார்த்தசாரதி

சொற்பொழிவாளர்கள் :—

க. அன்பழகன், கா. அப்பாத்துரை, கே. ஏ. மதியழகன், டாக்டர் தருமாம்பாள், என். வி. நடராசன், சத்தியவாணிமுத்து, மா. இளஞ்செழியன், இரெ. இளம்வழுதி, இரா. நெடுஞ்செழியன்

சி. வி. ராஜன், வி. உறுப்பினர்.

கே. கோவிந்தசாமி செயலாளர்.

இந்திய ரயில்வேக்கள் சாதனை

சாமான்கள் கொள்முதல் விவரம்

1948-49-ல் இந்திய சர்க்கார் ரயில்வேக்கள் மொத்தம் 100. 4 கோடி ரூபாய் பெறுமானமுள்ள சாமான்களை வாங்கியிருக்கின்றன. இவற்றில் வெளிநாடுகளிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட சாமான்களின் மதிப்பு 2 74 கோடி ரூபாய், இந்தியாவில் வாங்கப்பட்ட வெளிநாட்டுச் சாமான்களின் மதிப்பு 11. 69 கோடி ரூபாய். இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகளின் பெறுமானம் 86 கோடி ரூபாய் அல்லது செலவு செய்யப்பட்ட மொத்த தொகையில் 85. 6 சதவிகிதம் ஆகும்.

புதிய மார்க்கங்களும் இஞ்சினிரிங் வேலைகளும்

பரிசீலனை ஆண்டில் 157. 82 மைல் நீளத்துக்கும் புதிய ரயில் பாதைகள் போடப்பட்டன. சுமார் 500 மைல் தூரத்துக்குப் பாதைகள் அமைப்பதற்கான பல திட்டங்கள் விஷயத்தில் சர்வே வேலைகள் நடத்த உத்திரவிடப்பட்டது. இத் திட்டங்களில் மிக முக்கியமானது காஸ்ட்ரா தேலா ராணிவார மார்க்கமாகும். இதன் மொத்த நீளம் 250 மைலாகும். காண்ட்லா துறைமுகத்துக்குப் போக்குவரத்து வசதியளிக்கும் பொருட்டு இந்த மீட்டர் கேஜ் பாதை அமைக்கப்படுகிறது. தென்னிந்திய ரயில்வே மீட்டர் கேஜ் பாதையுடன் இணைக்க 90 மைல் நீளத்துக்கு, சமாஸ்திபூர் மேட்டுப்பாளையம் பாதை போடுவது முக்கியமான மற்றொரு திட்டமாகும். ஒன்பது புதிய பாதைகளில் நிர்மாண வேலை நடைபெற்று வந்தது. புதிய திட்ட மெதுவும் இந்த வருஷத்தில் அங்கீகரிக்கப்படவில்லை.

சிப்பந்திகள்

இந்திய ரயில்வேக்களில் ரயில்வே போர்டும் போர்டைச் சேர்ந்த காரியாலயங்களும் வேலை பார்த்துவரும் சிப்பந்திகளின் மொத்த எண்ணிக்கை, 1949 மார்ச் 31-ந் தேதி, 12 7,24 ஆக இருந்தது. 1948 மார்ச் 31-ந் தேதி இந்த எண்ணிக்கை 9, 00, 497 ஆக இருந்தது. 1948—49—ம் வருஷத்தில் முதலாவது ரயில்வேக்களில் வேலை பார்க்கும் சிப்பந்திகளுக்கு மாத்திரம், சம்பளங்கள், படிகள், க்ஷேம நிதிகள், உபகார நிதிகள் ஆகிய வகைகளுக்காக மொத்தம் 82.5 கோடி ரூபாய் செலவாகியது. 1947-48-ல் 66.5 கோடி ரூபாய் செலவாயிற்று. மத்திய சம்பளக் கமிஷனின் சிபாரிசுகளை அமுலுக்குக் கொண்டு வந்ததே செலவுத் தொகை அதிகரித்ததற்கு முக்கியக் காரணமாகும். இதைத்தவிர, சர்க்கார் ரயில்வேக்கள், 1948 49-ல் சிப்பந்திகளுக்கு தானியக்கடை சலுகைகள் மூலம் 20.8 கோடி ரூபாய் செலவு செய்திருக்கின்றன. 1947-48-ல் இவ்வகையில் ரூபாய் 27 கோடியே செலவுசெய்யப்பட்டது. இதையும் சேர்த்துக் கணக்கிட்டால் 1948-49-ல் முதல்தர ரயில்வேக்களின் சிப்பந்திச் செலவு மொத்தம் சுமார் 1 2 கோடி ரூபாயாகிறது. 1947 48-ல் மொத்தம் ரூ. 93.5 கோடியே செலவாயிற்று. பரிசீலனை வருஷ இறுதியில் மொத்தம் 589 தானியக்கடைகள் வேலை செய்து வந்தன. இவற்றின் மூலம் 6 13,000 சிப்பந்திகள் பங்கீட்டுத் தானியங்கள் பெற்றுவந்தனர். இக்கடைகள் மூலம் பங்கீடு பெற்று வந்தவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு சராசரி 24.3 ரூபாய் வீதம் அனுகூலம் கிடைத்து வந்தது. முந்திய வருஷத்தில் இது 22.4 ரூபாயாக இருந்தது.

தென்னிந்திய ரயில்வேயில் நடைபெற்ற எஞ்ஜின் சிப்பந்திகள் வேலை நிறுத்தம் தவிர, இந்திய சர்க்கார் ரயில்வேக்களில் இந்த வருஷம் வேலை நிறுத்தம் வேறெதுவும் நடைபெறவில்லை என்றே சொல்ல வேண்டும். வேலைநிறுத்தங்களின் விளைவாக நஷ்டமான ஆள்-வேலை-நாட்கள் நடைபெற்ற ஆள்வேலைநாட்களின் மொத்த எண்ணிக்கையில் சுமார் 0.2 சதவிகிதமேயாகும். 1948 ஆகஸ்டு இறுதியில் வில்லுபுரத்தில் நடைபெற்ற அகில இந்திய ரயில்வேத் தொழிலாளர் பொதுச்சபைக் கூட்டமொன்றில், சம்மேளனத்துடன் இணைக்கப்பட்ட தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தம் பற்றிய வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்று கோரி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தகராறிலிருந்த, பல விஷயங்களை சம்மேளனத்துடன் நேருக்குநேர் பேச்சு வார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ள முடியுமென்று சர்க்கார் கருதியதால், போக்குவரத்து-ரயில்வே மந்திரியை சந்திக்கும்படி அகில இந்திய ரயில்வேத் தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் அழைக்கப்பட்டார். இதன் பிரகாரம் 1949 ஜனவரி 4-ந் தேதியன்று பகலில் இவ்வருஷம் சந்தித்துப் பேசினர். அதன் பிறகு, டில்லியில் இந்தப் பேச்சு வார்த்தை தொடர்ந்து நடைபெற்றது. இந்த விவாதங்கள் வலுவாக, வேலை நிறுத்த வாக்கெடுப்பின் முடிவுகளை வெளியிட நடவடிக்கை எடுப்பதை, ஒத்திப்போடுவதென்று 1949 பிப்ரவரி 16-ந் தேதியன்று சம்மேளனம் முடிவு செய்தது. ஆனால், கம்யூனிஸ்டுகள் ஆதிக்கம் கொண்டுள்ள ஒரு சில சங்கங்கள் சில ரயில்வேக்களில் 1949 மார்ச் 9-ம் தேதி வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்படுமென்று அறிவித்தன. ஆனால் அது பலிக்காமற் போய்விட்டது.

ரயில்வே நிர்வாகத்துக்கும் தொழிலாளருக்கு மிடையே தகராறுள்ள விஷயங்களைக் கவனிப்பதற்காக, ரயில்வே போர்டின் பிரதிநிதிகளும், ரயில்வேத் தொழிலாளரின் பிரதிநிதிகளும் அடங்கிய கூட்டு ஆலோசனைக் கமிட்டி யொன்றை அமைப்பதற்காக ஏற்பாடுகள், இவ் வருஷ இறுதியில், பூர்த்தியாகும் நிலையிலிருந்தன.

கீழ்த்திசை நாடுகளிடையே விழிப்பு

லண்டன், ஜன. 5—

காமன்வெல்த் மாநாடு கீழ்த்திசை நாடுகளில் ஒன்றான இலங்கையின் முக்கிய நகரான கொழும்புவில் கூடவிருப்பது கீழ்த்திசை நாடுகளில் ஏற்பட்டுள்ள விழிப்பையே காட்டுகிறது என்று லண்டன் 'ஸ்டார்' பத்திரிகையின் ஆசிரியர் எழுதுகிறார்.

ஆசிய நாடுகளில் தேசிய உணர்ச்சி, தன் நாட்டு விவகாரங்களில் சொந்த முற்போக்கு கருத்துக்கள் எல்லாம் ஏற்பட்டிருப்பது பாராட்டத்தக்க விஷயம் என்றும், மாநாடு கூடவிருக்கும் இச்சமயத்தில் இந்தோனேஷியா சுதந்திர மடைந்தது இந்த விழிப்பு ஏற்பட்டுள்ளதற்கு ஒரு உதாரணம் என்றும் அவர் கூறுகிறார்.

எதிரொலி ஏற்படாதிருக்க ஏற்பாடு

லண்டன், ஜன. 5—

புது காமன்ஸ் சபைக் கட்டடத்தின் மேல்தளம் எதிரொலி ஏற்படாவண்ணம் தக்க சாதனங்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கிறது.

இப்புது கட்டடத்தைக் கட்டி முடிக்க 2,000 000 பவுன் செலவாகியிருக்கிறது, அடுத்த கோடைகாலத்தில் இக்கட்டிடம் உபயோகிக்கப்படும் என்று தெரிகிறது. —ருனோப்

திருவல்லிக்கேணியில் பொது டெலிபோன்

சென்னை, ஜன. 4—

பொது மக்களின் உபயோகத்துக்காக திருவல்லிக்கேணி மெரினாவில் அமைக்கப்பட்டிருந்த டெலிபோன் நிலையம், திருவல்லிக்கேணியில் பெல்ஸ்ரோடும் பைகிராப்ட்ஸ் ரோடும் சந்திக்கும் இடத்துக்கு இப்பொழுது மாற்றப்பட்டிருக்கிறது.

எஸ். எஸ். எல். சி மார்ச் தேர்வு

1949 அக்டோபர் பரீட்சையில் தோற்ற எஸ்.எஸ்.எல்.சி மாணவர்கள் 1950 மார்ச்சில் பரீட்சை எழுதுவதற்காக 31—1—1950 வரை பதிவு செய்து கொள்ளலாமென்றும், தபால் தலைகள் ஒட்டிய கவர்களை அனுப்பி மனுபாரங்களைத் தன்னிடமிருந்து பெற்றுக் கொள்ளலாமென்றும் சென்னை செகண்டரி கல்வி போர்டு அதிகாரி தெரிவிக்கிறார்.

ஹங்கேரியில் மேற்கு நாடுகள் பெயர்கள் பகிஷ்காரம்

புடாபெஸ்ட், ஜன. 5—

மேற்கு நாடுகளின் பெயர்களான ரோவால், ஸ்காவா போன்றவை சினிமாக்களுக்கும், இதர இடங்களுக்கும் வைக்கக்கூடாது என்று ஹங்கேரி சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. (குளோப்)

திராவிட முன்னேற்றக் கழக நிதிக்காக

ஈரோட்டில்

'சந்திரமோகன்'

13-1-50 வெள்ளியன்று, இரவு 10-மணிக்கு அர்ச்சுனன் அரங்கில் நடைபெறும்

தோழர்கள்

சி. என். அண்ணாதுரை, கே. ஆர். ராமசாமி, ஈ. வெ. கி. சம்பத்

விவரங்களுக்கு :— S. R. சந்தானம், மண்டி, ஈரோடு

சென்னை மாவட்ட தி. மு. க. மாநாடு

தொண்டர் படை அமைப்பு

இம் மாநாட்டின் தொண்டர் படை அமைப்பதற்கான கூட்டம் 10—1—50 செவ்வாய்க்கிழமை மாலை 6-மணிக்கு 'மாலை மணி' அலுவலகத்தில் (முத்துமாரிச் செட்டித் தெரு, 2/45 இலக்கம்) நடைபெறும். ஆர்வமுள்ள தோழர்கள் அனைவரும் வந்து தங்கள் பெயர்களைத் தொண்டர் படையில் பதிந்துகொள்ள வேண்டுகிறேன்.

ஏ. ஆர். சேஷாசலம், தொண்டர்படைத் தலைவர்

கோவை மாவட்டத் தோழர்களுக்கு வேண்டுகோள்

31—1—50 தேதி திருச்சியில் நடைபெற இருக்கும் 'பொதுக்குழு'வின் தீர்மானப்படி 14—1—50 லிருந்து 20—1—50 முடிய அங்கத்தினர்களைச் சேர்க்குமாறு கேட்டுக்கொண்டதை ஒவ்வொரு கிளைக் கழகங்களும் அறிந்திருப்பீர்கள். அங்கத்தினர்களைச் சேர்க்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். புதிதாக கழகம் அமைக்க விரும்பும் தோழர்கள் இங்கு விண்ணப்பித்து எழுதினால் ஆவன செய்யப்படும். புத்தாண்டில் புது ஊக்கத்துடன் பணியாற்ற வேண்டுகிறோம்.

இப்படிக்கு
ஜி. என். இராஜு
என். ஈ. பாலகுரு
அமைப்பாளர்கள்
அர்ச்சுனன் நிலையம்
பட்டக்காரர்பங்களா ஈரோடு

இந்தியாவில் ஆங்கிலப்படம் தயாரிக்க ஏற்பாடு

லண்டன், ஜன 5—

கல்கத்தாவில் 'நல்வாட இன்டியன்' என்ற ஆங்கிலப் படத்தை இந்திய-அமெரிக்க கூட்டுறவில் தயாரிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. பிரிட்டிஷ் நடிகர் எட்மெண்ட் க்வென் அவருடைய மனைவி ரோஸாலியும் இதில் நடிக்க இசைந்திருக்கிறார்கள்.

இவர்களைத் தவிர சில இந்திய நடிகர்களும் இப்படத்தில் நடிப்பார்களாம்.

ஜெனிவில் நாளை மாசாணத்தின் இப்போது முதல் தடவை சென்னை நிலையம் மூலம் சென்னை வெளிநாட்டு செய்திப் போக்குவரத்து ஸ்தாபனம் அறிவிக்கிறது.

வானொலி

(7-1-50 சனிக்கிழமை)

சென்னை

[211.3 மீட்டர்கள்]

காலை :

- 7 5 தமிழில் செய்திகள்
- 7-30 பி. எஸ். ராஜேஸ்வரி—பாட்டு
- 8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
- 8-15 சினிமாப் பாட்டுகள் (இ.த.)

பிற்பகல் :

- 1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
- 1 40 சினிமாப் பாட்டுகள் (இ.த.)
- 2-00 தமிழில் செய்திகள்
- 2-15 சிறுவர் நிகழ்ச்சி

மாலை :

- 5-50 பி. எஸ். கிருஷ்ணமூர்த்தி—பாட்டு
- 6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
- 6 20 சகுந்தலா—பாட்டு

இரவு :

- 7-00 சி. ராமசந்திரமூர்த்தி—பாட்டு
- 7-15 தமிழில் செய்திகள்
- 7 30 சினிமாப் பாட்டுகள் (இ.த.)
- 7-45 திருச்சியில் உள்ளபடி
- ஆங்கிலத்தில் செய்திகள்
- 9-15 ஆங்கிலப் பேச்சு
- 10-30 முடிவு

திருச்சி

[395.8 மீட்டர்கள்]

காலை :

- 7-15 தமிழில் செய்திகள்
- 7-30 எஸ். பாண்டுரங்க பாகவதர்—பாட்டு
- 8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
- 8 15 எம். ஏ. வேணுகோபால்—வயலின்
- 8-30 காலை இசை (இ. த.)

பிற்பகல் :

- 1 00 எம். ஏ. வேணுகோபால்—
- 1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
- 1-40 பலகலைக் குழந்தைகளுக்கு
- 2 00 தமிழில் செய்திகள்

மாலை :

- 5 00 எஸ். பாண்டுரங்க—பாட்டு
- 5 40 சச். எஸ். மத்வாச்சார்—கோட்டுவாத்தியம்
- 6 00 ஆங்கிலத்தில் செய்திகள்
- 6-15 சித்ரகானம் (இசைத்தட்டு)
- 6-30 கிராம நிகழ்ச்சிகள்

இரவு :

- 7-15 தமிழில் செய்திகள்
- 7-30 பி. சுப்பையா—பேச்சு
- 7-45 தியாகராஜ உற்சவம்
- 9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
- 9-15 சென்னையில் உள்ளபடி
- 9-30 தியாகராஜ உற்சவம்
- 1 முடிவு.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press- 2/45, Muthumari Chetty Street Madras-1.